# கல்கி

11/3



# வெள்ளி விழா வைபவம்

"இந்த பூமியில் எதற்காகப் பிறந்தோம்? அதிலும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களாக ஏன் ஆனோம்?" என்று ஆசிரியர்கள் பெரும்பாலோர் நாடெங்கும் குறைப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், ஓர் ஆசிரியர் "மறுபடியும் மறுபடியும் நான் இந்த பூமியில் பிறந்து உபாத்தியாயர் தொழில் செய்ய விரும்புகிறேன். இப்போது நான் வாங்கும் சம்பளத்தைக் காட்டிலும் இரண்டு பங்கு கொடுத்து அழைத்தாலும் வேறு உத்தியோகத்துக்குப் போகமாட்டேன்!" என்று சொன்னால், அது எத்தனையோ அதிசயமான சம்பவமல்லவா? அம்மாதிரி சென்ற செப்டம்பர்மீ 29உ ஓர் ஆசிரியர் சொன்னார். புரசவாக்கத்திலுள்ள ஸர் எம். ஸி. டி. முத்தையா செட்டியார் ஹைஸ்கூலின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர்தான் அவர். நமது அட்டைப் படத்தில் விளங்குவோரில் இடதுபுறம் நிற்கிறவர்.




ஸ்ரீ கோபாலகிருஷ்ணையர் மேற்படி பள்ளிக்கூடத்தில் தொண்டு செய்ய ஆரம்பித்து இருபத்தைந்து வருஷம் ஆனதை முன்னிட்டுச் சென்ற ஞாயிற்றுக்கிழமை வெள்ளி விழாக் கொண்டாடினார்கள். மற்ற உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள், புரசவாக்கம் பிரமுகர்கள், பள்ளிக்கூட நிர்வாகக் கமிட்டியார் எல்லாரும் உற்சாகமாக ஒத்துழைத்து மேற்படி விழாவை நடத்தினார்கள். ஹெட்மாஸ்டர் கோபாலகிருஷ்ணையரின் கழுத்தில் மாலைக்கு மேல் மாலையாக விழுந்தன. கையில் உபசார பத்திரத்துக்கு மேல் உபசார பத்திரமாக வந்து குவிந்தன. வெள்ளிக் கூஜா, வெள்ளித் தட்டுகள் பரிசு அளிக்கப்பட்டன. பலர் சொல்மாரி பொழிந்து, ஹெட்மாஸ்டர் புது மாப்பிள்ளையைப்போல் நாணமடையும்படியாகப் புகழ்ந்து தள்ளிவிட்டார்கள்!

இத்தனை புகழுக்கும் இதற்கு மேலுங்கூட உரிமையுள்ளவர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணையர். கல்வி கேள்வியிலும் விழுப்பம்தரும் ஒழுக்கத்திலும் அவர் உயர்ந்தவர். உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும், மாணாக்கரின் பெற்றோர்களும் மகிழ்ந்து பாராட்டும்படியாக ஹெட்-

மாஸ்டர் வேலை பார்த்து வருவதுடன், அருமையான வேதாந்த உபந்நியாசங்களின் மூலம் புரசவாக்கம் மகாஜனங்களின் மதிப்பைக் கவர்ந்து 'மகரிஷி' என்ற பட்டமும் பெற்றவர்.

ஹெட்மாஸ்டருக்கு அருகில் கம்பீரமாக நிற்பவர், மேற்படி பள்ளிக்கூடத்தின் நிர்வாகக் கமிட்டித் தலைவரான ஸ்ரீ எம். சி. டி. எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள். தம்முடைய தந்தையின் பெயரைத் தாங்கிய கல்விஸ்தாபனத்துக்கு அவர் பல லட்சம் ரூபாய் நன்கொடை அளித்து, அழகான கட்டிடங்கள் கட்டிக் கொடுத்திருப்பதுடன், பள்ளிக்கூட நிர்வாகத்தில் பணத் தட்டு ஏற்படா வண்ணம் நிரந்தர நிதியும் ஏற்படுத்தி யிருக்கிறார். பள்ளிக்கூட நிர்வாகத்தைப் பற்றி ஆசிரியர்கள் புகார் சொல்லி முறையிடாத ஸ்தாபனத்துக்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், புரசவாக்கம் ஸர் எம். சி. டி. முத்தையா செட்டியார் ஹைஸ்கூலைத் தயக்க மின்றிக் குறிப்பிடலாம்.

ஆண்டிப்பட்டி ஜமீன்தாரும் கொடை வள்ளலுமான ஸ்ரீ பெத்தாச்சி செட்டியார் அவர்கள் கல்விக்காக அளித்துள்ள நன்கொடைகள் பிரசித்தியானவை. ஸ்ரீ எம். சி. டி. எம். சிதம்பரம் செட்டியார் கல்விக்கு நன்கொடை தரும் விஷயத்தில் தமது சித்தப்பாவைப் பின்பற்றித் தம் தந்தையின் பெயர் சிறந்து விளங்கும்படி செய்து வருவது பெரிதும் பாராட்டத் தக்கது. சென்னை மாகாணத்தின் பிரபல செல்வர்களில் ஒருவரும் இன்ஷூரன்ஸ் அரசருமான ஸ்ரீ சிதம்பரம் செட்டியார் தமது வாழ்நாளில் இது போன்ற இன்னும் பல நல்ல காரியங்களில் ஈடுபட்டுச் 'செல்வம் பெற்றதால் பெற்ற பயனை' அடைவார் என்று எதிர்பார்க்கிறோம்.